புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என் தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் அருப்புக்கோட்டை தொகுதியில் காரியாபட்டி வட்டார அரசு மருத்துவமனை உள்ளது. அந்த வட்டார மருத்துவமனை, மதுரை—தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலையில் உள்ளது. அந்த மருத்துவமனைக்கு அவசர ஊர்தி கிடையாது. அந்த வட்டார மருத்துவமனைக்கு அவசர ஊர்தி வழங்க அரசு ஆவன செய்யுமா எனப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் வழங்குவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை நான் பேரவைத் தலைவர் வாயிலாக சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோன்று விருதுநகர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய வட்டம், வட்டம் சார்ந்த அருப்புக்கோட்டை, இராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர், சிவகாசி, திருச்சுழி, காரியாபட்டி ஆகிய அனைத்து மருத்துவமனைகளுக்கும் ஆம்புலன்ஸ் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.கே. சிவசாமி.

திரு. கே.கே. சிவசாமி: தொகுதி மக்கள் சார்பாக அம்மா அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 29, திரு. க. முருகவேல் ராஜன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

29—

நெற்களம் அமைத்தல்

***21838—திரு. க. முருகவேல் ராஜன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, தென் இலுப்பை கிராமத்தில் நெற்களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

2003 நவம்பர் 4]

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், தென் இலுப்பை கிராமத்தில் அடுத்த நிதியாண்டில் நெற்களம் அமைப்பது குறித்து ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. முருகவேல் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி, வந்தவாசி முழுமையாக விவசாயத்தையே நம்பியிருக்கக்கூடிய ஒரு பகுதி. அதிலும் வறட்சியால் மிகவும் கொடூரமாக பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய விவசாயிகளுடைய நீண்ட நாள் கோரிக்கை—தென் இலுப்பை கிராமத்தில் கிட்டத்தட்ட 300 ஹெக்டேர் நிலப் பரப்பிலே விவசாயம் நடந்து கொண்டிருக்கிறது. அந்தக் கிராமத்தில் நூத்தம்பாடி என்கிற மதுராவும் இருக்கிறது—கிட்டத்தட்ட 5 ஆயிரம் விவசாயிகள் பயன்படக்கூடிய அந்தப் பகுதியிலே நெற்களம் இல்லையென்பது நீண்ட நாளைய கோரிக்கையாக இருக்கிறது. அடுத்த நிதியாண்டிலே அது பரிசீலிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்த ஆண்டிலே அதை எடுத்துக்கொள்வதற்கு ஏதாவது வாய்ப்பு இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புவதோடு, வந்தவாசி, கோரைப் பாய் தொழிலுக்கு மிகவும்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முருகவேல் ராஜன், நெற்களம் பற்றி மட்டும்தான் கேட்க வேண்டும். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலர்களம் கட்டுவதற்கு இடம் தயார் நிலையில் இருக்கும்பட்சத்தில் தென் இலுப்பை கிராமத்தில் அடுத்த ஆண்டில் கட்டித்தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க. முருகவேல் ராஜன்.

திரு. க. முருகவேல் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கேட்கிற அந்த இடத்தைத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். அப்படி இடம் தருகிறபட்சத்தில் இந்த

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

ஆண்டிலே அதைக் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டே கட்டிக் கொடுப்பதற்கு அந்த விற்பனை வாரியத்தில் நிதி இருக்க வேண்டும். ஆகவே அடுத்த ஆண்டு கட்டித்தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 30,* திரு. வி. ஜெயராமன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

30—

குளிர்பதன கிடங்கு

***22882—திரு. வி. ஜெயராமன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சியில் தக்காளி மற்றும் பலவகை பச்சைக் காய்கறிகளை சேமித்து வைக்கும் குளிர்பதன கிடங்குகள் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொள்ளாச்சியில் குளிர்பதன கிடங்கில் இருப்பு வைத்து விற்பனை செய்யும் அளவிற்கு தக்காளி மற்றும் காய்கறிகள் வரத்து இல்லை. எனவே, அங்கு குளிர்பதன கிடங்கு அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவின் முதன்மை மாநிலமாக தமிழகத்தை உருவாக்கி வெற்றிநடை போட்டுவரும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, பொள்ளாச்சி என்பது தென் இந்தியாவிலேயே மிகப் பெரிய காய்கறிச் சந்தையைக் கொண்டிருக்கிற ஒரு பகுதி என்பதை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். பொள்ளாச்சியிலே மட்டும் காய்கறிகள் விளைவதில்லை. பொள்ளாச்சியைச் சுற்றியுள்ள 50 கிலோமீட்டர் பகுதியிலே விளைகிற